# Summaries in Tamil

**வீட்டுவன்முறைச் சூழலில் தாய்க்கும் பிள்ளைக்குமான உறவிற்கு ஆதரவழித்தல்: சூர்கெட், நேபாளதில் பெற்றாருக்கான ஒரு முன்னோடித் திட்டம்**

*María Vergara, Emilia Comas, Irada Gautam & Uma Koirala*

இந்த கட்டுரையானது நேபாளத்தின் மத்திய மேற்கு சூர்கெட் மாவட்டத்தில் வீட்டுவன்முறைக்கு தற்பொழுது முகம்கொடுத்துக்கொண்டிருக்கின்ற இல்லது முன்பு அனுபவித்த தாய்மாருக்கான குழு முற்தடுப்புத் திட்டத்தின் அனுபவத்தினை விபரிக்கின்றது. இருபது பெண்கள் இத்திட்த்தில் பங்குபற்றினார்கள், மூன்றுகிழமைக்கொருமுறை 9 மாதங்களுக்கு கூடினார்கள். அதன்பின் எடுக்கப்பட்ட தரவுகளின் முடிவுகள் குறிப்பிம்படியான முன்னேற்றங்களை கீழ்க்காணும் விடயங்கள் சார்ந்து எடுத்துக்காட்டியது. (அ) உதவிநாடியின் மனப்பாங்கு, உணர்வுகள், நடத்தைப்பாங்குகள்பற்றிய புரிந்துணர்வு (ஆ)குடும்பத்திற்குள் முரண்பாட்டு சூழலை கையாளும் தன்மையில் முன்னேற்றம் மற்றும் (இ) பெரியளவிலான வலுவூட்டல் மற்றும் சுய- நம்பிக்கை. அமர்வுகளை நடத்தும்போது இலகுபடுத்துனர்கள் முகம்கொடுத்த சவால்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இந்த உற்சாகமூட்டும் அனுவமானது நடத்தைப்பாங்கு, உறவுகள், மற்றும் உளதெரப்பிகள் அணுகுமுறை என்பவற்றின் கலப்புத்திட்டமானது வன்முறையினால் பாதிக்கப்பட்ட தாய்மார்களின் தாய் பிள்ளை உறவில் மறைமுகமான தாக்கங்களைத் தடுப்பதற்கு உதவலாம் என்று எடுத்தியம்புகின்றது. இந்தக் கட்டுரையை அளிக்கைசெய்வதன்மூலம் வன்முறையான சூழலில் பெற்றார்களின் பிள்ளை பராமரிப்புத் திறன்களை ஆதரிக்கும் செயற்பாடுகளை செய்வதிலுள்ள சவால்களை ஆராய்வதற்கு ஒரு தளம் கிடைக்கின்றது.

**முக்கிய சொற்பதங்கள்**: பெற்றோர் பிள்ளைகளை பராமரிக்கும் திறன்கள், வீட்டு வன்முறை, நேபாளம்

---

**பகிர்வு வட்டம்: மியன்மாரில் நடைபெற்ற மிகவும் எளிதில் ஆபத்தினை எதிர்கொள்ளக்கூடிய மக்களுடன் நடாத்தப்பட்ட சமூகமட்ட உளசமூக இடையீடுகளினூடான கற்கை**

*Maria Vukovich & Gwen Vogel Mitchell*

கடந்தகாலங்களாக மியன்மாரில் நடைபெறும் யுத்தம் மற்றும் அடக்குமுறைகள் ( இந்நிலை இப்பொழுது அதிகாரபூர்வமாக அறியப்பட்ட விடயமாகும்) அதனுடைய மக்களில் மிகவும் தாக்கமான உளவியல் மற்றும் உணர்வுரீதியான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. துர்அதிஷ்டவசமாக கலாச்சாரச்கிற்கு ஒத்ததான முறையில் உளசமூகசேவைகளை வளங்குதல் மியன்மாரில் மிகக்குறைவாகக் காணப்படுகின்றன. இந்தக் கற்கை 8 அமர்வுகளைக் கொண்ட பகிர்வு வட்டம்பற்றி ஆராய்கின்றது. மியன்மாரில் யன்கூன் என்ற இடத்தில் பயிற்றப்பட்ட உள்ளூர் பயிற்றுவிப்பாளர்கள் பகிர்வு வட்டத்தில் 57 பங்குபற்றுனர்கள் இந்த 3 இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களில் ஏதோ ஒன்றில் சேர்ந்தவர்களாகக்காணப்பட்டார்கள். ஆரம்ப கண்டுபிடிப்புகள் பகிர்வு வட்டமானது உள அறிகுறிகளை முன்னேற்றுவதற்கும் உளசமூக ஆதரவினைக் கொடுப்பதற்கும் ஒரு நல்ல முறையாக இருக்கலாம் என்று பரிந்துரைத்தது. அதிலுள்ள குறைபாடுகள் உள்ளடக்கப்பட்டன; ஒத்துப்பார்ப்பதற்கான குழு இல்லாமை, ஒப்பிடும்பொழுது சிறிய ஆராய்விற்கான மாதிரி அளவு, மற்றும் இலகுவான இடையீட்டிற்கு முன்னான பின்னான மதிப்பீட்டு முறை. மேலும், வேறு முரண்பாட்டுப்பிரதேசங்களில் இதனைப் பிரயோகிக்கக்கூடிய தன்மையினையும் இதனது முடிவுகளை தெளிவாக்குவதற்கும், விளக்குவதற்கும் இலகுவில் பாதிக்கப்படக்கூடிய குழுக்கழுடன் நடைபெறுகின்ற குழச்செயற்பாடுகள்பற்றிய கற்கை தேவை

**முக்கிய சொற்பதங்கள்** : முன்னைய அரசியல் கைதிகள், லெஸ்பியன், கே , இருபால் உறவு, திருநங்கைகள், தங்களுடைய பால்நிலையினைக் கேள்வியெழுப்புவோர், HIV/ AIDS உடன் வாழ்வோர், மியன்மார், உளசமூ இடையீடுகள், அனுபவப்பகிர்வு வட்டங்கள், இல்குவில் பாதிக்கப்படக்கூடியவர்கள்

---

**கிராமப்புற ஹெய்ரியில் வேலைப் பகிர்வு: சமூக சேவகர்களுக்கு பயிற்சிக் கால மேற்பார்வையுடன் கூடிய, பயிற்சிக்கால மேற்பார்வை அற்ற பயிற்சித்திட்டங்களின் தரம்சார் மதிப்பீட்டின் சுருக்கம்**

*Kristen E. McLean, Bonnie N. Kaiser, Ashley K. Hagaman, Bradley H. Wagenaar, Tatiana P. Therosme & Brandon A. Kohrt*

பயிற்சிக்குப் பின்னர் வேலை பகிர்ந்தளிக்கப்பட்ட பின்னர் பயிலுனர்களுக்கான மேற்பார்வை இருக்க வேண்டும் என்று சர்வதேச மட்டத்தில் பேசப்பட்டாலும், பயிற்சிக்காலத்தில் பயிலுனர்களின் அனுபவங்கள், மேற்பார்வை முறைகள் என்பன பற்றி மிகக் குறைவான ஆய்வுகளே உள்ளன. பயிற்சிக்கால வேலை அனுபவங்களை பயிலுனர்களின் பக்கத்திலிருந்து அறிந்துகொள்வது மேற்பார்வை முறைகளைக் கூர்மையாக்க உதவும். இக் கட்டுரையின் எழுத்தாளர்கள் ஹெய்ரியில், பல்கலாசார, பல மட்ட வேலைப் பகிர்வு முன்னோடிப் பயிற்சி ஒன்றை 3 கட்டங்களாகத் திட்டமிட்டனர். 1- உளசமூகப் ஆதரவுப் பயிற்சி ஒன்றை மதிப்பிடுவதற்கான literature review. 2- நடைமுறைப்படுத்தல் மற்றும் திட்டமிட்ட பயிற்சியின் தரம் சார் மதிப்பீடு. 3- வேலைப் பகிர்வுப் பயிற்சியும் 2 வருட பின் தொடர் மேற்பார்வையும்.
பயிற்சியயின் போது பங்களிப்பு குறைவாக இருந்ததுடன், திறன்களைக் கற்றல், ஊக்கம் என்பவையும் குறைவாக இருந்தன. பயிலுணர்களுக்கு திறன்களைப் பாவித்து வேலை செய்யும் வாய்ப்புக் கிடைத்த பின்னர் திறன், வாண்மை அதிகரித்தது தெரிய வந்தது.

**முக்கிய சொற்கள்**: ஹெய்ரி, வேலைப்பகிர்வு, பயிற்சி

---

**ஒரு விதவை, பாதிக்கப்பட்டவள், தாய்: கஷ்மீரில் வாழும் பெண்களின் மீழ்தன்மை மற்றும் நன்னிலை தொடர்பான சிக்கல்களைப்பற்றி மீண்டும் சிந்தித்தல்**

*Shweta Verma*

கஷ்மீரில் விதவைகளாக்கப்பட்ட பெண்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட எண்ணிக்கை சார் ஆய்வொன்றின் பெறுபேறுகளை ஒரு சம்பவக் கற்கை மூலம் விபரிக்கிறது இக் கட்டுரை. நன்னிலையை உணர்வதற்கு ஒருவரின் மீழ்தன்மை உதவுகிறது என்ற அடிப்படையில், பெண்கள் முரண்பாட்டின் போது எவ்வாறு 'பாதிக்கப்பட்டவள்', 'விதவை', 'தாய்' என்ற பல



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.

பெயர்களினூடாகப் பயணிக்க வேண்டியுள்ளது. இக் கட்டுரையில் வெறுமனே ஒருவரை மீழ்தன்மையுள்ளவர் அல்லது மீழ்தன்மையற்றவர் என்று வகைப்படுத்துவது, உணர்வுகளை நல்ல உணர்வுகள், தீய உணர்வுகள் என்று வகைப்படுத்துதல் ஆகியவற்றிற்கெதிராகக் கேள்வியெழுப்பப் படுகிறது. 'பாதிக்கப்பட்டவர்' என்று ஒருவர் தன்னை ஏற்றுக்கொள்வது உதவியளிக்குமா அல்லது பாதகமானதா? கவலைப்படுவது கூடாதா? இங்கு கொடுக்கப்பட்டுள்ள சம்பவக் கற்கையானது கஷ்மீரில் விதவைகளாக்கப்பட்ட பெண்களுடன் செய்யப்பட்ட PhD தரம்சார் ஆய்வொன்றில் தொகுக்கப்பட்ட 50 சம்பவக் கற்கைகளில் ஒன்றாகும்.

**முக்கிய சொற்கள்**: விதவை, முரண்பாடு, மீழ்தன்மை, அடையாளங்கள்

---

உளசமூகத் தொழிலாளர்கள், மனநல சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை: இயலுமை விருத்தித் திட்டங்களின் ஏற்பாட்டாளர்கள் பயிற்றுனரைத் தேர்ந்தெடுக்கும் போது கருத்தில்கொள்ள வேண்டியவை.

*Guus van der Veer*

உளசமூகத் தொழிலாளர்கள், மனநல சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறைகளை நடத்துவதற்கு என்னை அழைக்கும் போது, சில வேளைகளில் அடைய முடியாத இலக்குகளை எனக்குக் கொடுக்கிறார்கள். பயிற்சியை ஏற்பாடு செய்பவர்கள் பயிற்சியில் என்ன பாடம் எப்போது கையாளப்படும் என்ற விபரமான திட்டத்தை எதிர்பார்க்கிறார்கள். வேறு சில வேளைகளில், வேறு ஒரு பயிற்சியாளர் முன்னொரு காலத்தில் நடத்திய பயிற்சியின் பின் தொடர் பயிற்சியாக எனது பயிற்சியை வடிவமைக்கச் சொல்கிறார்கள். இக் கட்டுரையில் என்னைப் பொறுத்தவரை ஒரு பயிற்சி அறிக்கையில் அடங்க வேண்டியவை எவை? உளசமுகத் தொழிலாளர் மற்றும் மனநலன் சேவையாளரைப் பயிற்றுவிப்பது தொடர்பாக ஏற்பாட்டாளர்கள் தெரிந்துவைத்திருக்க வேண்டியவை எவை? பயிற்சியாளரைத் தேர்வு செய்யும் போது கேட்கப்பட வேண்டிய வினாக்கள் என்ன? என்பவற்றைக் கூறியுள்ளேன்.

**முக்கிய சொற்கள்**: பரஸ்பரப் பரிமாறல் பயிற்சி, குறித்த சந்தர்ப்பம் தொடர்பான பயிற்சி, பங்குபற்றுனரை மையமாக வைத்துப் பயிற்சி, முன்னரே தயார் செய்யப்பட்ட பயிற்சி, வளப்படுத்தலுக்கான பயிற்சி, உளசமூகத் தொழிலாளர்கள், மனநல சேவை உத்தியோகத்தர்கள்

---

**சிரியாவில் அகதிகளின் மனநலத் தேவைகளை வெளிக்கொணர்தல்.**

*Nadim Almoshmosh*

சிரியாவில் அகதிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட சுய அனுபவத்தின் அடிப்படையில் கட்டுரையாளர் இதனை எழுதுகிறார். இவர்களின் மனநலத் தேவைகளில் பலவிதமான உளசமூகத் தேவைகளும் அடங்குகின்றன. இந்த உளசமூகத் தேவைகளை மேலும் விளங்கிக் கொள்வதற்கு மேலதிக மதிப்பீடு அவசியமாகும். பிரச்சினைகள் பாரதூரமானவை என்பதுடன் பாதிக்கப்பட்டவர்களின் தொகையும் அதிகமாகவுள்ளது. இவர்களில் சிலர் தொடர்ச்சியான துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டும் தினமும் குண்டுத் தாக்குதல்களை நேரடியாகக் கண்டவர்களாகவும் இருக்கிறார்கள். பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல முன்னர் பட்ட துயரம், எதிர்காலம் கேள்விக்குறியாக இருப்பது, வெட்கம், முடக்குப்பட்ட உணர்வு போன்றவை பிரச்சினையை மேலும் விஸ்தரிக்கின்றன. கட்டாய வெளியேற்றம், மனநலப் பிரச்சினைகள் தொடர்பான மறையான கருத்துக்கள், போதுமான வல்லுனர்கள் இல்லாமை போன்ற பொதுவான பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அகதிகள் சென்றடைந்த சமூகத்தினர் அகதிகளைக் கையாள ஆயத்தமாக இருக்கவில்லை. ஏராளமான மனதாபிமான நிறுவனங்கள் வேலைசெய்யும் பட்சத்திலும் ஒருங்கிணைப்பு இல்லாமல் பல நிறுவனங்கள் ஒரே சேவையை வழங்குகின்றன. இவ்வாறு தொடரந்துகொண்டிருக்கும் நெருக்கடி நிலையில் சேவை வழங்கலை மேலும் எவ்வாறு சிறப்பாக்க முடியும் என்ற பரிந்துரைகளுடன் கட்டுரை நிறைவடைகிறது.

**முக்கிய சொற்கள்**: கட்டாய இடப்பெயர்வு, மனநலன், அகதிகள், சிரியா



Copyright © War Trauma Foundation. Unauthorized reproduction of this article is prohibited.